ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2121/45 - 2019 මැයි මස 02 වැනි බ්‍රහස්පතින්දා - 2019.05.02
*2121/45 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மே மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி. 21/1978* (x) (A)

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

25 அ என்னும் பிரிவின் கீழான கட்டளை

*1978* ஆம் ஆண்டின் *16* ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் *25* அ என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகரத்திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், *2007* ஆம் ஆண்டின் *7* ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், PV *17745* என்ற பதிவிலக்கத்தைக் கொண்டதுமான கலம்போ இன்டர்நஷனல் நோட்டிக்கல் அன்ட் என்ஜினியேரிங் கொலேஜ் (பிரைவேட்) லிமிட்டட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் *70* இ என்னும் பிரிவின்கீழான அறிக்கையொன்றைப் பெற்றிருந்து, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும் *2018*, ஏப்பிறல் *19* ஆந் திகதிய *2067/15* ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை, அதன் நிரல் I இலும் மற்றும் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவிலும் காணப்படுகின்ற ''தகவல் தொழில்நுட்பத்தில் சிறப்பு கல்வி இளமாணி'' என்னும் பதிவை உடனடுத்து, இதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இதற்கான அட்டவணை II இல் முறையே நிரல் I இன் கீழும் மற்றும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத்திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும்
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2019*, ஏப்பிறல் *30*.


*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை I**

நிபந்தனைகள்

கலம்போ இன்டர்நஷனல் நோட்டிக்கல் அன்ட் என்ஜினியேரிங் கொலேஜ் (பிரைவேட்) லிமிட்டட், இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட -

(i) கைத்தொழில் மருந்தாக்க விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி மற்றும் ஒப்பனை விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி என்ற பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் மாணவர்களைச் சேர்க்கும்போது -

(அ) க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானத்துறையில் ஒரே அமர்வில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைக் கற்கை நெறியொன்றுடன் சேர்த்து, க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் பௌதீக விஞ்ஞானம், பொறியியல் தொழில்நுட்பவியல் மற்றும் உயிரியல் முறைமைகள் தொழில்நுட்பவியல் பாடத்துறைகளுக்கிடையேயிருந்து ஒரே அமர்வில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) என்ற நுழைவுத் தகைமைகளுக்கு

அமைந்தொழுகுதல் வேண்டும்.

(ii) உயிரியல் மருத்துவ விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி என்ற பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் மாணவர்களைச் சேர்க்கும்போது, க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானத்துறையில் ஒரே அமர்வில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

(iii) வணிக நிருவாகத்தில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி, மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி மற்றும் கைத்தொழில் முகாமைத்துவத்தில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி என்ற பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் மாணவர்களைச் சேர்க்கும்போது -

(அ) க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் வர்த்தகத்துறையில் ஒரே அமர்வில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு; அல்லது

(ஆ) குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் அங்கீகரிக்கப்பட்ட அடிப்படைக் கற்கை நெறியொன்றுடன் சேர்த்து, க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஏதேனும் பாடத்துறையில் ஒரே அமர்வில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) என்ற நுழைவுத் தகைமைகளுக்கு,

அமைந்தொழுகுதல் வேண்டும்.

(iv) ஆங்கிலத்தில் சிறப்பு கலை இளமாணி என்ற பட்ட நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் மாணவர்களைச் சேர்க்கும்போது, க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் ஆங்கிலத்தை ஒரு பாடமாகக்கொண்ட ஏதேனும் பாடத்துறையில் ஒரே அமர்வில் மூன்று (3) 'சாதாரண சித்திகள்' (S) என்ற அல்லது அதற்குச் சமமான குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும்.

**அட்டவணை II**

| **நிரல் I**<br>**பட்டம்** | **நிரல் II**<br>**பட்டத்துக்கான சுருக்கீடு** |
|---|---|
| கைத்தொழில் மருந்தாக்க விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி சிறப்பு (கைத்தொழில் மருந்தாக்க விஞ்ஞானம்) |
| ஒப்பனை விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி சிறப்பு (ஒப்பனை விஞ்ஞானம்) |
| உயிரியல் மருத்துவ விஞ்ஞானத்தில் சிறப்பு விஞ்ஞான இளமாணி | பிஎஸ்சி சிறப்பு (உயிரியல் விஞ்ஞானம்) |
| வணிக நிருவாகத்தில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி | பிஎம்ஜிரி சிறப்பு (வணிக நிருவாகம்) |
| மனிதவள முகாமைத்துவத்தில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி | பிஎம்ஜிரி சிறப்பு (மனிதவள முகாமைத்துவம்) |
| கைத்தொழில் முகாமைத்துவத்தில் சிறப்பு முகாமைத்துவ இளமாணி | பிஎம்ஜிரி சிறப்பு (கைத்தொழில் முகாமைத்துவம்) |
| ஆங்கிலத்தில் சிறப்பு கலை இளமாணி | பிஏ சிறப்பு (ஆங்கிலம்) |

5 - 319

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.